பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 12 செவ்வாய்க்கிழமை 25.01.2022 கதிர் 307

## அமரகீர்த்தி எம்.பிக்கும் கொரோனாத் தொற்று

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்து கோரலவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அவர் தற்போது தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

# அரசியல் கைதிகள் விடயம்: விரைவில் தீர்வு கிடைக்கும்



## நீதி அமைச்சர் அலி சப்ரி உறுதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் எவரையும் அர சியல் கைதிகள் என அடையாளப்படுத்த நாம் விரும்ப வில்லை. எனினும், இந்த விவகாரத்துக்குப் பயங்கரவா தத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதன் மூலம் விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க அரசு தயாராக இருக்கின்றது.

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

2

## முல்லைத்தீவில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் மரணத்தில் சந்தேகம்

முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவி - தேறாங் கண்டல் பகுதியில் இளைஞர் ஒருவர் அவரின் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றினுள் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

மல்லாவி, தேறாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த கணேசன் புஸபராஜ் (வயது 23) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கொலையா? தற்கொலையா என்ற கோணத்தில் மல்லாவிப் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ் ஊடகப் பேச்சாளராக மீண்டும் றோஹண நியமனம்!



பொலிஸ் ஊடகப் பேச்சாளராக மீண்டும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண நியமிக்கப் பட்டுள்ளார்.

இதற்கு முன்னரும் அவர்

2

## கச்சதீவு வருடாந்தத் திருவிழாவை மார்ச் 11,12 இல் நடத்தத் தீர்மானம்

### கொரோனாவால் 500 பக்தர்களுக்கு மட்டும் அனுமதி; தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்குக் கதவடைப்பு

(ந.லோகதயாளன்)

கச்சதீவு வருடாந்தத் திருவிழாவை மார்ச் மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடத்துவது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று நடை பெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வழமைபோன்று 10 ஆயிரம் பக்தர்களை

2

## பிரகீத் காணாமல் ஆக்கப்பட்டு 12 வருடங்கள்: நீதி வேண்டி மனைவி தலைமுடி காணிக்கை



ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொட காணாமல் ஆக்கப்பட்டு 12 வரு டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அவருக்கு நீதி நிலைநாட்டப்பட வேண் டும் என்று வலியுறுத்தி, பிரகீத் எக்னெலி கொடவின் மனைவி சந்தியா எக்னெலி கொட தனது தலைமுடியைக் காணிக் கையாகச் செலுத்தியுள்ளார்.

கொழும்பு முகத்துவாரத்தில்

2

## இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீரவுக்கும் கொரோனாத் தொற்று

இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீரவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அவர் தற்போது தனிமைப்படுத்தப் பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகி யிருந்தது.

## தயா மாஸ்டருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடச் சிறை!



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராகச் செயற்பட்ட தயா மாஸ்டர் என்றழைக்கப்படும் வேலா யுதம் தயாநிதிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில், தடைசெய்யப்பட்ட அமைப் பான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து

2

## இந்த அரசை விரட்டியடித்தால்தான் நாட்டுக்கும் மக்களுக்கும் நிம்மதி!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு விரட்டியடித்தால்தான் நாட்டுக்கும் மக்களுக்கும் நிம்மதி கிடைக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.


இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது வருமாறு:-

இந்த அரசு கொடூர அரசு. மக்களை எப்படியெல் லாம் வதைக்க முடியுமோ அந்தளவுக்கு துன்பங் களை அள்ளி வழங்கியுள்ளது இந்த அரசு. ஆட்சியில் வாழ்க்கைச்சுமை உச்சம் தொட்டுள்ளது. மறுபுறத்தில் மத்திய வங்கியோ தொடர்ச்சியாக

2

## மட்டக்களப்பில் இன்று காலை ஓட்டோ சாரதி சடலமாக மீட்பு!

### பொலிஸார் தீவிர விசாரணை



மட்டக்களப்பு, பார்வீதி, பெரிய உப்போடை வீதியில் ஓட்டோ சாரதி ஒருவர் இன்று காலை மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக ஓட்டோவுடன் மீட்கப்பட்டுள்ளார் என்று மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கருவப்பங்கேணியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மாசிலாமணி தர்மரட்ணம்

2

## தயா மாஸ்டருக்கு 5 வருடங்களுக்கு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயற்பட்டமைக்குத் தயா மாஸ்டருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு இன்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இந்த அரசை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயணத்தை அச்சிட்டுவருகின்றது. இதனால் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும். பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும்.

இந்த அரசுக்கு மக்கள் பற்றி துளியும் கவலை இல்லை. தமக்கான பாதுகாப்பு மற்றும் தமது சகாக்களின் பாதுகாப்பு என்பனவே ஆட்சியாளர்களுக்கு முக்கியம். அதனால்தான் மக்கள் நலன் பற்றி சிந்திக்காமல் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடித்தால்தான் நாட்டுக்கும் மக்களுக்கும் நிம்மதி கிடைக்கும். அரசை விரட்டிக்கும் பொறுப்பை நாம் கையில் எடுத்துள்ளோம். எனவே, மக்கள் அனைவரும் எமக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

## மட்டக்களப்பில் இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
(வயது 48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மட்டு. ரயில் நிலையத்தின் முன்னால் உள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் இருந்து ஓட்டோவைச் செலுத்தி வந்துள்ளார். கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு அதிகாலை 4 மணிக்கு வந்தடையும் ரயிலில் இருந்து வரும் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக சம்பவ தினமான இன்று அதிகாலை 4 மணிக்கு வீட்டைவிட்டு ஓட்டோவில் சென்றுள்ளார்.

இந்தநிலையில், ரயில் நிலைய ஓட்டோ தரிப்பிடத்தில் இருந்து புன்னைச் சோலை பகுதிக்குப் பயணி ஒருவரை ஏற்றிச் சென்ற நிலையில் பார்வீதி, பெரிய உப்போடை வீதியில் காலை 6 மணிக்கு ஓட்டோ சேதமடைந்த நிலையில் அதன் அருகே மர்மான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தீவிர விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரகீத் காணாமல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைந்துள்ள காளி கோவிலில், இன்று காலை விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட அவர் அதன்பின்பு தனது தலைமுடியைக் காணிக்கையாக செலுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டார்.

அவருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கச்சதீவு வருடாந்தத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதிக்க முடியாது எனவும், 500 பேரை மட்டுமே அனுமதிக்க முடியும் எனவும் சுகாதாரத்துறையினர் இறுக்கமான நிபந்தனை விதித்துள்ளனர்.

இதற்கமைய திருவிழாவை மார்ச் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடத்துவது எனவும், தற்போதைய கொரோனா அச்சம் காரணமாக தமிழ்நாட்டுப் பக்தர்களை அனுமதிப்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் ஊடகப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பணியாற்றி வந்தநிலையில் அண்மையில், அந்தப் பதவிக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, அந்தப் பதவிக்கு மீண்டும் அஜித் ரோஹண நியமிக்கப்பட்டுள்ளார்.

## அரசியல் கைதிகள் விடயம்: .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நடமாடும் நீதிக்கான அணுகல் சேவை வேலைத்திட்டம் தொடர்பில் இன்று நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிறைக்கைதிகளும் மனிதர்களே என்ற வாசகத்தை மாத்திரம் எழுதிவைப்பதால் சிறைக்கைதிகள் பாதுகாக்கப்படப் போவதில்லை. கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற தாக்குதல்கள், அச்சுறுத்தல் செயற்பாடுகள் குறித்து நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். இதனை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதேபோல் இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் இடம்பெறுகின்ற காரணத்துக்காக ஒட்டுமொத்த சிறைச்சாலை கட்டமைப்பையும் தவறாகச் சித்தரிக்கவும் முடியாது.

சகல நாடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மாறாக இலங்கையில் மாத்திரம் இவை இடம்பெறுவதாகக் கூறவும் முடியாது. எவ்வாறு இருப்பினும் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வகையில் சகல தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு சிலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை தமிழ் அரசியல் கைதிகள் என கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எவ்வாறு இருப்பினும் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதையே ஜனாதிபதியும் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு தற்போது முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது குறித்து ஆராயும் விதமாக ஜனாதிபதியால் நிபுணர்கள் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. 42 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நீண்டகாலத்துக்கு இந்தப் பிரச்சினைகளை இழுத்தடித்துக்கொண்டு செயற்பட அரசு தயாராக இல்லை. பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வொன்று அவசியம் என்பதையே ஜனாதிபதியும் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்தார். எனவேம், அது குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## ஜே.வி.பியின் வாய்ப்பந்தல்

**“தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும்.”**

**– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) தலைவர் அனுர குமார திஸநாயக்கா கூறியிருக்கின்றார்.**

**இந்தக் கருத்து உண்மையில் அவர் அடிமனதிலிருந்து – நேர்மையான உத்வேக எண்ணத்தோடு – வெளிவந்ததா அல்லது சமகால அரசியல் கட்டாயங்களின் நிமித்தம் உரைக்கப்பட்ட பசப்புப் பேச்சா என்பதில் சந்தேகம் உள்ளது.**

**ஏனெனில் ஜே.வி.பியின் கடந்த கால சரித்திரங்கள் – நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் – தமிழ் மக்கள் கண்டு, கேட்டு அறியாதவையல்ல.**

**தமிழர் தாயகமான வடக்கையும் கிழக்கையும் இலங்கையின் பௌத்த – சிங்களப் பேரினவாதக் கட்டமைப்பின் அடிப்படையில் அமைந்த நீதிமன்றம் மூலம் பிரிக்க வழிகோலியதே ஜே.வி.பிதான். அது மட்டுமல்ல, அதனைப் பெரும் வரலாற்றுச் சாதனையாக – வடக்கையும் கிழக்கையும் பிரித்தவர்கள் நாங்களே என்று – மார்தட்டி, பிரசாரப்படுத்தி, இப்போது வரை அரசியல் லாபமீட்டி வரும் ஜே.வி.பியின் போக்கு தமிழரைப் பொறுத்தவரை இலகுவில் மறந்து விடக்கூடியதல்ல.**

**2002 – 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் – ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு இடையில் நடந்த சமாதானப் பேச்சுக்களை – அமைதி முயற்சிகளை – அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் சேர்ந்து முறியடித்துக் குழம்பியமையில் ஜே.வி.பியின் பங்கும் , பின்புலமும் மறந்து போகக்கூடியவை அல்ல.**

**தென்னிலங்கையின் பௌத்த – சிங்களப் பேரினவாத மனவமைப்பிலிருந்து வெளியே வந்து, நீதி, நியாயத்தை எடுத்துரைத்தால் அந்தப் பெரும்பான்மையினரின் வாக்குகளை இழந்து விடுவோம் என்ற ஆதங்கத்தில் – பயத்தில் – அரசியல் பீதியில் – அந்தப் பேரினவாதப் போக்கைப் பகிரங்கமாக கண்டிக்கும் திராணியில்லாமல் தான் எப்போதும் தனது அரசியல் நியாயங்களைப் பகிரங்க வெளியில் இதுவரை காலமும் முன்வைத்து வருகின்றது ஜே.வி.பி.**

**அது தமிழர்களுக்கு நன்கு தெரியும். புரியும்.**

**இப்போதும் கூட தமிழர்களின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சினைக்கு முதலில் தீர்வுகாண வேண்டும் என்ற ஜே.வி.பி. தலைவரின் பேச்சு, உண்மையில் அக்கட்சியின் நிலைப்பாடா அல்லது வெறும் பிரசார நடிப்பா என்ற சந்தேகம் தமிழர்களுக்கு ஆழமாக இல்லாமல் இல்லை.**

**தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அடிப்படை விடயம். அதற்கு முன்னர் யுத்தத்தின் பெயரால் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட முறையில் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு – அநீதிகளுக்கு – பேரழிவு அடாவடித்தனங்களுக்கு – நீதி கிட்ட வேண்டும். அதுவும் பிரதானமானது.**

**இந்த நாட்டில் அட்சர கணித எண்ணிக்கை ரீதியில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட அழிவு நடவடிக்கைகளுக்கு – யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனி உரிமை மீறல்கள் தொடர்பில் – சர்வதேச நியமங்களுக்கு அமைய நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நியாயத்தை முதலில் பகிரங்கமாக அறிவிக்க ஜே.வி.பி. தயாரா?**

**அப்படிப் பகிரங்கமாக அறிவிக்கத் திராணி இல்லாமல், பேரினவாத வெறிச் சிந்தனையில் எழுந்த மேலாதிக்கத்துக்குப் பயந்து கொண்டு, தமிழர்களுக்கு நீதி செய்யப்பட வேண்டும் என்று வெறும் வாய்ப்பந்தல் அறிவிப்பு விடுப்பது அர்த்தமற்றது.**

## நாட்டின் மின்சார நெருக்கடியை சமாளிக்கத் தனியாரிடம் உதவி!

நாட்டில் நிலவும் மின்சார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை வழங்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். ஜனவரி 25 ஆம் திகதி முதல் பெப்ரவரி 04 ஆம் திகதி வரை தினசரி மின்வெட்டுக்கான அனுமதியை இலங்கை பொதுச் சபையிடம் கோரியுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் நீண்டகால மின்வெட்டு தேவைப்படாது என அவர் நம்பிக்கையுடன் குறிப்பிட்டார். தற்போது, அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் பல 3 ஆயிரம் மெகாவாட் ஜெனரேட்டர்களை வைத்துள்ளன.

இந்த ஜெனரேட்டர்கள் நாட்டில் மின்சார உற்பத்திக்கு உதவும் எனவும், மின்சாரத்தை உற்பத்தியை செய்ய முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார். அத்தகைய ஜெனரேட்டர்களை வைத்திருக்கும் நிறுவனங்களுடன் பேச்சு நடத்தப்பட்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

இந்நிலையில், மின்சார நெருக்கடியை சரிசெய்ய தனியார் நிறுவனங்கள் தங்கள் உதவியை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாணவிகளைப் பின் சென்று அச்சுறுத்தினார் மர்ம நபர்!

### பொகவந்தலாவவில் சம்பவம்

பொகவந்தலாவ பிரதேசத்தில் பாடசாலை மாணவிகள் இருவரை மர்ம நபர் ஒருவர் பின்தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவ – கியூ தோட்டப் பகுதியில் இருந்து பொகவந்தலாவ நகரத்தில் உள்ள பாடசாலைக்கு செல்லும் மாணவிகள் இருவரே குறித்த சம்பவத்துக்கு முகம்கொடுத்துள்ளனர். மாணவிகள் இருவரும் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, ஆடைகள் ஏதும் இன்றி அவர்களை பின்தொடர்ந்த நபர், அச்சுறுத்தும் வகையில் சத்தமிட்டுள்ளார்.

இதனால் அச்சமுற்ற மாணவிகள் அருகில் இருந்தவர்களை சத்தமிட்டு அழைத்தபோது, குறித்த மர்ம நபர் அங்கிருந்து தப்பி ஓடிச்சென்றார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மாணவிகளின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் அறிவித்துள்ளனர். மேற்படி பிரதேசத்தில் இருந்து பல கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் நடந்தே செல்கின்றமையுடன், போக்குவரத்து வசதிகள் ஏதும் இல்லாமல் அல்லல்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உடையார் கட்டுப் பகுதியில் மீண்டும் வெடிபொருள் மீட்பு



முல்லைத்தீவு – உடையார் கட்டு காட்டுப் பகுதியில் வெடிபொருள்களைத் தோண்டி எடுக்கும் நடவடிக்கை முயற்சி நேற்று (திங்கட்கிழமை) பாதுகாப்பு காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காட்டுப்பகுதியில் வெடிபொருள்களைத் தோண்டி எடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது நிலத்தில் மேல் காணப்பட்ட இரண்டு எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

உடையார் கட்டு காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் வெடிபொருள்கள் காணப்படுகின்றன எனப் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் முறைப்பாடு செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நேற்று(திங்கட்கிழமை) குறித்த பகுதியைத் தோண்டும் நடவடிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடையார் கட்டுப்பகுதியில் இருந்து சுமார் பத்து கிலோமீற்றர் தூரம் அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, படை அதிகாரிகள் சிறப்பு அதிரடிப்படையினர், கிராம சேவையாளர் உள்ளிட்டவர்கள் குறித்த பகுதியைப் பார்வையிட்டுள்ளமையுடன் கனரக இயந்திரமும் காட்டுப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.


ஏற்கனவே தோண்டப்பட்ட பகுதியில் வெடிபொருள்கள் காணப்படுகின்றன என அடையாளம் காட்டப்பட்டு நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டுள்ளது.


இதன்போது குறித்த பகுதி சாதாரண இயந்திரந்தால் அப்புறப்படுத்துவது ஆபத்தானதென சிறப்பு அதிரடிப்படையினரால் நீதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் குறித்த இடத்தை அகழ்வு செய்யநீதிமன்றத்தால்கட்டளைவழங்கப்படும் என நீதிவான் சம்பவ இடத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

மேற்படி இடத்தின் அருகில் உள்ள நிலத்தின்மேல்காணப்பட்டஇரண்டு81மில்லிமீற்றர் எறிகணைகளும் நீதிவான் முன்னிலையில் சிறப்பு அதிரடிப்படையினரால் எடுக்கப்பட்டுள்ளன.

காட்டுப்பகுதியில் முன்னர் விடுதலைப் புலி களின் வெடிபொருள் தயாரிக்கும் முகாம்கள் காணப்பட்டுள்ளமையால் விடுதலைப் புலிகளினால் கைவிடப்பட்ட வெடிபொருள்களை சட்டவிரோத பயன்பாட்டாளர்கள் எடுத்து சென்று வரும் நிலையில் புதுக் குடியிருப்பு பொலிஸாரால் கடந்த காலங்களில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. காட்டுப்பகுதியில் வெடி பொருள்களின் எச்சங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மகாத்மா காந்தியின் விருப்பத்துக்குரிய பாடல் குடியரசுத் தின நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்பட்டது





ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் திகதி முதலாக நான்கு நாள்களுக்கு இந்தியக் குடியரசு தின கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றமை வழமையாகும். ஜனவரி 29 ஆம் திகதி, குடியரசுத் தின கொண்டாட்டங்கள் நிறைவடையும் நாளில், முப் படைகளின் தலைவரான குடியரசுத் தலைவர் டெல்லிக்கு வந்த பாதுகாப்பு படைகளை மீண்டும் தங்கள் முகாம்களுக்கு திருப்பி அனுப்பிவைப்பார். இந்த நிகழ்ச்சி பாதுகாப்புப் படைகள் பாசறைக்கு திரும்பும் நிகழ்ச்சி என்று அழைக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் மகாத்மா காந்திக்கு விருப்பமான பாடலான 'என்னுடன் இருங்கள்' என்ற பாடல் இசைக்கப்படுவது வழக்கம். பிரிட்டன் நாட்டை சேர்ந்த ஹென்றி பிரான்சிஸ் லைட் என்ற கவிஞரால் 1847 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்த கிறிஸ்தவ பாடல், 1950 ஆம் ஆண்டு முதலே குடியரசு தின நிகழ்ச்சியில் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த ஆண்டு பாசறைக்கு திரும்பும் நிகழ்ச்சியிலிருந்து அந்தப் பாடல் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதில் கவிஞர் முகமது இக்பால் எழுதிய 'சாரே ஜஹான் சே அச்சா' (ஒட்டுமொத்த உலகத்தையும் விட இந்தியா மேலானது) என்ற பாடல் இசைக்கப்படவுள்ளதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

## பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து 25 ஆண்டுகளை வீணடித்துவிட்டோமென்கிறார் உத்தவ் தாக்கரே

பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து 25 ஆண்டுகளை வீணாக்கி விட்டதாக சிவசேனா தலைவரும், மகாராஷ்டிரா முதல்வருமான உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

மறைந்த சிவசேனா தலைவர் பால் தாக்கரேவின் பிறந்த தினத்தையொட்டி மகாராஷ்டிரா முதலமைச்சர் உத்தவ் தாக்கரே இணையம் மூலம் கட்சித் தொண்டர்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் பேசுகையில், பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து 25 ஆண்டுகளை வீணடித்துவிட்டோம். பா.ஜ.க.வின் இந்துத்துவா என்பது வெறும் சந்தர்ப்பவாத இந்துத்துவா. அதை அதிகாரத்தை கைப்பற்ற மட்டுமே பயன்படுத்துகிறது. சிவசேனா கட்சி பா.ஜ.க.வைத்தான் தன்னை விட்டு வெளியேற்றி உள்ளது. இந்துத்வாவை அல்ல.

சிவசேனா தனது இந்துத்துவா கொள்கையைக் கைவிடவில்லை. ஆட்சியைப் பிடிப்பதற்காக மட்டுமே பா.ஜ.க. மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி சேருகிறது. பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிவதுதான் பா.ஜ.க.வின் கொள்கை" - என்று தெரிவித்துள்ளார்.







## குடியரசுத் தினவிழாவில் பங்கேற்க தடுப்பூசி செலுத்தாதோருக்கு தடை!

டெல்லியில் நாளை நடைபெற உள்ள இந்தியக் குடியரசுத் தினவிழாவை முன்னிட்டு சில கட்டுப்பாடுகளைக்கொண்ட அறிக்கையொன்றை டெல்லி மாநகர பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிவுறுத்தலில், 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களும் இரு தவணை கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களும் குடியரசுத்தின விழாவில் பங்கேற்க அனுமதி வழங்கப்படாது எனவும், விழாவுக்கு வரும் அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும், உரிய வகையில் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## தேர்தல் வாக்குறுதியில் இலவசங்கள் தடை கோரி உச்சநீதிமன்றத்தில் மனு



மக்கள் வரிப்பணத்தில் இருந்து இலவசங்களை அறிவிக்கும் அரசியல் கட்சிகளின் பதிவை ரத்துச் செய்வதற்கு, தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குரைஞர் அஷ்வினி குமாா உபாத்யாய என்பவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், தோதல் வரும்போது வாக்காளாகளை கவரும் எண்ணத்தில் அரசியல் கட்சிகள் இலவசங்களை அறிவிக்கும் நடைமுறை இருந்து வருகிறது. இது ஜனநாயக மதிப்பீடுகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பதோடு, அரசியல் சாசன நடைமுறைகளையும் கடுமையாகப் பாதிக்கிறது.

இந்த நடைமுறை , அரசியல் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்ற அல்லது தக்கவைத்துக்கொள்ள வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பது போன்ற செயலாகும். ஜனநாயக நடைமுறைகளைப் பாதுகாக்க இதுபோன்ற நடைமுறைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

இதற்காக, தேர்தலுக்கு முன்பாக அரசியல் கட்சிகள் இலவசங்களை அறிவிப்பதைத் தடை செய்யும் கட்டுப்பாடுகளை, மாநில கட்சியாக அங்கீகாரம் அளிப்பதற்கான தோதல் சின்ன ஒதுக்கீடு உத்தரவு 1968 இல் தோதல் ஆணையம் சோக்க உத்தரவிட வேண்டும்.

பஞ்சாப் மாநில சட்டமன்றத் தேர்தலுக்காக ஏகப்பட்ட இலவசங்களுக்கான வாக்குறுதிகள் அளிக்கப்படுகின்றன. பஞ்சாப் அரசால் ஊழியர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் கூட வழங்க முடியவில்லை. ஏற்கனவே அம்மாநிலத்துக்கு 77 ஆயிரம் கோடி ரூபா கடன் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கடன் மேலும் அதிகரிக்கிறது. இதில் இலவசங்களை எப்படி தர முடியும்?, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொங்கல் பொருள்களில் 500 கோடி ஊழல் சி.பி.ஐ. விசாரணை கேட்டு அ.தி.மு.க. மனு



பொங்கல் பரிசுப் பொருள்கள் வழங்கியதில் 500 கோடி ரூபா ஊழல் நடைபெற்றதாகவும், அது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கேட்டும் அ.தி.மு.க. சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பொங்கல் திருநாளையொட்டி நிவாரண அட்டைதாரர்களுக்கு 21 மளிகை பொருள்கள் கொண்ட பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்தது. அதன்படி சுமார் 1,297 கோடி செலவில் 2.15 கோடி பேருக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கியதில் 500 கோடி ரூபா முறைகேடு நடைபெற்றதாகவும் இந்த முறைகேடு குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக்கோரியும் அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இன்பதுரை, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், 21 மளிகைப் பொருள்கள் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்த நிலையில், பல நிவாரணக் கடைகளில் குறைந்த அளவிலான பொருள்களே வழங்கப்பட்டன எனவும், தரம் குறைந்த மளிகை பொருள்களை கொள்முதல் செய்து அதிகாரிகள் முறைகேட்டில் ஈடுபட்டனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பல இடங்களில் வழங்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பில் பல்லி மற்றும் ஊசி போன்ற அபாயகரமான பொருட்கள் இருந்தமை குறித்தும், பல பொதி உணவுப் பொருள்களில் காலாவதித் திகதி குறிப்பிடாமல் இருந்தது குறித்தும் முறைப்பாடு அளித்தும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைகேட்டில் தமிழகம் மட்டுமல்லாமல் வெளிமாநில அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளதாகவும், முதல்வரின் கட்டுப்பாட்டின் கீழாகவே பொலிஸ் துறை வருவதால் இந்த முறைகேடு குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனவும், மேற்கொண்டு பொங்கல் பரிசு வழங்கவும் தடை விதிக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

# பரீட்சை கடமைகளிலும் அரசியல் தலையீடுகள்!

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

சுயாதீனமாகச் செயற்பட வேண்டிய பரீட்சைக் கடமை நியமனங்களிலும் அரசியல் தலையீடு இடம்பெறுகின்றமை இந்த அரசின் கேவலமான செயல்களில் ஒன்றாகும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துவை வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் 5 ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட்சைக்கடமைக்காக நியமனங்கள் செய்யப் பட்டுள்ளன. இந்த நியமனங்களில் வழமைக்கு மாறாக இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றுள்ளன என அதிபர், ஆசிரியர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தப் பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமையாகப் பின்பற்றப்பட்டு வந்த இனச்சமநிலை பின்பற்றப் பட வில்லை. முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் இம்முறை பரீட்சைக் கடமைகளில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

பரீட்சைக் கடமை வழங்கப்பட்ட கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டை, கோமரங்கடவெல போன்ற தூரப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை, குச்சவெளி போன்ற பிரதேசத்தவர்களே வழமையாக இப்பகுதி பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்டனர். இம்முறை சிரமப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிலை திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வழமையாக வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் வழங்கப்படும் பெயர் பட்டியல்களிலிருந்தே பரீட்சைக் கடமை நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு செய்தவதனூடாக சிரேஷ்டத்துவம், தகைமை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கும். இம்முறை இந்த நிலை பின்பற்றப்படவில்லை. வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர் பட்டியலுக்கு வெளியே நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசியல் ரீதியாக வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலிலிருந்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன எனக் கூறப்படுகின்றனது.

அதிபர், ஆசிரியர்களின் சிரேஷ்டத்துவம் கவனத்தில் கொள்ளப்படாமல் முதலாந்தர அதிபர் ஆசிரியர்கள் உதவி மேற்பார்வையாளர்களாக இம்முறை நியமிக்கப்பட்டுள்ளனர். வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் கூட பெயர், தரம், பாடசாலை என்பன சரியாகக் குறிப்பிடப்படாது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கலந்து கொண்டோரிடமிருந்து ஒப்பம் பெறப்பட்ட போது பரீட்சை நிலையமோ மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் பெயர்களோ குறிப்பிடப்படாது ஒப்பங்கள் பெறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பரீட்சைக் கடமை தொடர்பாக தெளிவுபடுத்தும் கூட்டம் பகல் 12.00 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் மாலை 5.00 வரை அது நடத்தப்பட்டுள்ளது. கலந்து கொண்டவர்களுக்கு மதிய உணவு கூட வழங்கப்படவில்லை. இக்கூட்டத்தில் வைத்தும் நியமனங்களில் விருப்பு வெறுப்புகள் காட்டப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டதாக கலந்து கொண்டோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

ஆளுநர் செயலகத்தில் இருந்து வந்த அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சைக்கான பிராந்திய இணைப்பாளர் செயற்பட்டதாலேயே இவ்வாறான குறைபாடுகள் இடம்பெற்றன எனக் கூறப்படுகின்றது.



திருகோணமலை மாவட்டத்தில் பரீட்சைக்கடமைகளில் இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றாலும் 20ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்து, வரவு செலவுத்திட்டம், போர்ட் சிட்டி சட்ட மூலம் என பல விடயங்களில் அரசுக்கு ஆதரவாக இருந்து வரும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் இந்த விடயம் குறித்து எது வித நடவடிக்கையும் தங்களால் எடுக்க முடியாது என கை விரித்தனர் என சில அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேர்மையாக நடக்கவேண்டிய பரீட்சைக் கடமைகளில் இவ்வாறான தலையீடுகளும், இனரீதியான புறக்கணிப்புகளும் இடம்பெற்றால் பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத் தன்மை கேள்விக்குறியாகி விடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16 ஆவது ஆண்டு நிகழ்வு அனுஷ்டிப்பு



2006 ஆம் ஆண்டளவில் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16 ஆவது நிகழ்வு திருகோணமலை ஊடக இல்லத்தில் நேற்று மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

திருமலை ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் புகைப்படத்துக்கு மலர் தூவி மெழுகுவரத்தி ஏற்றப்பட்டு மௌன அஞ்சலியும் இடம் பெற்றது.

## மட்டக்களப்பில் இருந்து கொழும்பிற்கு அதிவேக ரயில் சேவை ஆரம்பம்



கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொலநறுவை - கொழும்பு கோட்டைக்கு இடையில் ஆரம்பிக்கப்பட்ட புலதுசி அதிவேக குளிரூட்டப்பட்ட புகை யிரத சேவையானது போக்கு வரத்து அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சின் தீர்மானத்திற்கு அமைவாக எதிர்வரும் 28.01.2022 திகதி முதல் மட்டக்களப்பு-கொழும்பு சேவையாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

இந்த ரயில் சேவை மட்டக்களப்பிலிருந்து அதி காலை 01.30 மணிக்கு புறப்பட்டு காலை 08.45 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும். மீண் டும் பிற்பகல் 15.05 கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் இரவு 21.52இற்கு மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது

## தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இன்று தைப்பொங்கல் விழா





தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி தலைமையில் இன்று இடம் பெற்ற பொங்கள் விழாவில் பாரதிபுரம் முத்துமாரி அம்மன் ஆலய பிரதமக் குரு கதிர்வேல் பிள்ளை பரப்பிரமஜோதி பூசையை நிகழ்த்தினார்.

குறித்த தைப்பொங்கல் நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பதவி நிலை உத்தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சரியான தீர்மானங்களை எடுக்க நிறுவனக் கட்டமைப்பு அவசியம்!

## இராணுவத் தளபதி சவேந்திரசில்வா தெரிவிப்பு



ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, நிபுணத்துவ பகிர்வு மற்றும் பொதுவான சட்ட அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்கான சரியான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்க முடியும் என பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா 'கிரிப்டோ கரன்சிகளின் நிதி பயங்கரவாதத்திற்கு எதிரான பயன்பாடு' தொடர்பில் இடம்பெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.

இந்தியாவின் மிகப்பெரிய தொலைக்காட்சி செய்தி நிறுவனமான ஏசியன் நியூஸ் இன்டர்நேனல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிராந்திய வல்லுநர்கள், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் கொள்கைவகுப்பாளர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற மாநாடொன்றுக்கு ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஏசியன் நியூஸ் இன்டர்நேனல் நிறுவனம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை வருமாறு –

தெற்காசிய பிராந்தியத்தின் சர்வதேச எல்லைகளில் பயங்கரவாதிகள் மற்றும் குற்றச் செயற்பாட்டாளர்களின் நாடுகடந்த மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கு, பொதுவானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான கொள்கைகளுக்கமைவான அடிப்படையில் சட்டத்தை அமுலாக்கும் நிறுவன உட்கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டியது அவசியமென இலங்கை பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவ ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதற்கமைய பயங்கரவாதம் அல்லது கூட்டு வன்முறைச் செயற்பாடுகளை எதிர்ப்பது தொடர்பில் அரசாங்கங்களால் மேற்கொள்ளப்படும் நியாயமான முயற்சிகள் தொடர்பில் தெற்காசிய பிராந்திய ரீதியிலான ஒப்பந்தமொன்றைக்கைசாத்திட வேண்டியதன் அவசியம் பற்றிய கலந்துரையாடல்களை மேம்படுத்த வேண்டியதும் அவசியமாகும். மேலும், அதற்கான தீர்மானங்களை நிறுவனக் கட்டமைப்பொன்றின் கீழ் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம்மற்றும்நிபுணத்துவதெரிவுகளை பறிமாற்றிக்கொள்ள வேண்டியதன் அவசியம் ஆகியவற்றையும் ஜெனரல் சவேந்திர சில்வா வலியுறுத்தினார்.

எங்கள் பிராந்தியத்தின் சர்வதேச எல்லைகளில் பயங்கர வாதிகள் மற்றும் குற்றச் செயல்பாட்டாளர்களின் நாடு கடந்த மற்றும்ஒருங்கிணைந்தசெயற்பாடுகளை முறியடிப்பதற்கு ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிகள் என்பன அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அதற்காக சுங்க திணைக்கள சோதனைச் சாவடிகளில் தகவல் பரிமாற்ற பொறிமுறைகளை நிறுவுதல், குடியேற்றச் செயற்பாடுகளுக்கான தடைகளை விதித்தல் மற்றும் ஆயுதங்கள், போதைப்பொருள்கள், போர் கருவிகள், ஆபத்தான பொருள்களைக் கொண்டு செல்லுதல் மற்றும் சேமித்து வைத்தல் போன்ற செயற்பாடுகளை தடுப்பதற்கான ஒத்துழைப்புக்கள் அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

அதன்படி, சந்தேகநபர்கள் தொடர்பிலான சாட்சியங்களை சேகரித்தல், தேடப்படும் நபர்கள் தொடர்பிலான தகவல்களை பரிமாற்றிக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளூடாக ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ள முடியுமென தெரிவித்த ஜெனரல் சவேந்திர சில்வா, பயங்கரவாத மற்றும் குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை கையாளுதல் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்புக்களுக்கு பயிற்சிகளை வழங்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

அதன்படி, குறிப்பிட்ட நாடுகளின் இராணுவ வீரர்களுக்கு மாத்திரம் பயிற்சிகளை வழங்கும் முறைக்கு மாறாக தெற்காசிய பிராந்தியத்தின் படையினருக்கு கூட்டுப்பயிற்சிகளை வழங்குவது அவசியமாகும். அத்தோடு, பிராந்திய அளவில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிராந்திய நிதியுதவி அவசியப்படும் எனத் தெரிவித்த ஜெனரல் சவேந்திர சில்வா அண்மைய காலங்களில் பயங்கரவாத செயற்பாடுகளுக்கான நிதி உதவிகளை வழங்கும் செயற்பாடுகளில் அதிகரிப்பைக் காண முடிகிறது என்றும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வரும் அனுபவமிக்க இராணுவம் என்ற வகையில் எங்களுக்கு ஒத்துழைப்பு தேவைப்படுவது அத்தோடு எதிர்ப்புக்களைச் சமாளிப்பது தொடர்பில் எங்கள் வசமிருக்கும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள முடியுமெனவும் ஜெனரல் சுட்டிக்காட்டினார்.

அதேபோல பிராந்திய நாடுகள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையில் பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான போராட்டத்தின் போது நாடுகளுக்கு இடையிலான இணக்கப்பாட்டுத் தன்மை மிகவும் அவசியமானதெனவும் தளபதி சுட்டிக்காட்டினார்.

# நீராவி பாரந்தூக்கி ரயில் வவுனியா சென்றடைவு!

முற்றும் முழுமையாக நீராவி மூலம் இயங்குகின்ற பாரந்தூக்கிரயில் ஒன்று நேற்று (திங்கட்கிழமை) காலை வவுனியா ரயில் நிலையத்தை வந்தடைந்தது. 1953 ஆண்டு இங்கிலாந்து நாட்டிலிருந்து எமது நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 100 அடி நீளமும், 35 ஆயிரம் km திணிவை உயர்த்தக்கூடியதுமான பாரந்தூக்கி ரயிலே இவ்வாறு வந்தடைந்தது.

இந்த ரயில் முற்றும் முழுதாகவே நீராவி மூலம் இயக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது

# பாலியல் பலவீனத்தை பைஸர் ஏற்படுத்தாது!

## வைத்திய நிபுணர் சர்மிளா டி சில்வா

கொவிட் எதிர்ப்பு தடுப்பூசி வகைகளில் ஒன்றான பைஸர் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதால் பாலியல் ரீதியாக பலவீனத்தை ஏற்படுத்தாது என வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பைஸர் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதால் குழந்தை பாக்கியம் இல்லாமல் போகும் எனவும், பாலியல் ரீதியான பலவீனங்கள் ஏற்படும் எனவும், மாதவிடாய் சக்கரத்தில் மாற்றம் ஏற்படும் எனவும் செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு கொழும்பு போதனா வைத்தியசாலையின் நிபுணத்துவ வைத்தியர் சர்மிளா டி சில்வா இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் –

எம்மிடம் சில நோயாளிகள் வருகின்றார்கள். இடுப்பு வலி, வயிற்றுவலி, இரண்டு, மூன்று நாள்கள் இருமல் எனக் கூறுகின்றனர். ஒரு மாத காலத்துக்கு முன்னர் எடுத்துக்கொண்ட தடுப்பூசியினால் இவ்வாறு ஏற்பட்டது என அவர்கள் கருதுகின்றார்கள்.

தடுப்பூசி ஏற்றிக்கொண்ட தன்பின்னர்ஏற்படும்அனைத்து நோய்களுக்கும் தடுப்பூசியே காரணம் எனக் கருதுகின்றார்கள்.

இது மக்களின் மத்தியில் நிலவி வரும் மூட நம்பிக்கையேயாகும்.

இளைஞர், யுவதிகள் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதில்லை. பாலியல் பலவீனம் ஏற்படும், மாதவிடாய் சக்கரத்தில் மாற்றம் ஏற்படும், குழந்தைப்பேறின்மை ஏற்படும் என அவர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகள் பைசர் தடுப்பூசியால் ஏற்படப் போவதில்லை என வைத்தியர் சர்மிளா டி சில்வா கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

# உருத்திரா தேவி மோதி 18 வயது மாணவன் பலி

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த உருத்திரா தேவி ரயிலுடன் மோதி மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். நேற்று திங்கட்கிழமை மாலை 6.15 மணியளவில் குறித்த விபத்து சம்பவம் நடைபெற்றுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் கொடிகாமத்தை சேர்ந்த உதயகுமார் பானுசன் (வயது 18) எனும் மாணவனே உயிரிழந்துள்ளான். சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகில் ரயில் பாதையை நடந்து கடந்த வேளை யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ரயிலுடன் மோதியதில் மாணவன் உயிரிழந்துள்ளான். குறித்த மாணவன் இன்று பாடசாலையில் நடைபெறும் உயர்தர மாணவர் ஒன்றுகூடலுக்கு (சோர்சல்) நிகழ்வுக்கு ஆடைகளை தைக்க சென்ற போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நின்று பயணிப்பவர்களுக்கு பஸ்களில் குறைந்த கட்டணம்

பஸ்களில் நின்றுகொண்டு பயணிப்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தை அறவிடும் முறை ஒன்றை அடுத்த வாரம் முதல் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும், ஆசன விதி மீறல்கள் தொடர்வதால், நின்றுகொண்டு பயணிக்கும்பயணிகளுக்கு, கட்டணமறுசீரமைப்புக்கு முன்னர் அறவிட்ட கட்டணத்தை அறவிடும் வகையில் புதிய முறை ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

அதன்படி, அடுத்த வாரம் முதல் இரண்டு கட்டணமுறைகளில் பஸ்சேவைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார விதிகளை மீறும் அனைத்து பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள, பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக பல பகுதிகளில் சட்டவிதிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

# சகல நேரங்களிலும் ராஜபக்ஷ குடும்பத்துடன் கைகோர்த்தே நின்றேன்; இனியும் நான் நிற்பேன்!

## ஆபிரிக்காவிற்கான பிரதமரின் சிறப்புத் தூதர் தெரிவிப்பு

கென்யா மற்றும் உகண்டாவில் இருந்து தனியார் ஜெட் விமானத்தின் மூலம் நான் இலங்கை வந்தது உண்மைதான். அதேபோல நான் வருகை தந்த அதே ஜெட் விமானத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருப்பதிக்கு செல்ல ஏற்பாடு செய்தேன் என்பதும் உண்மை. அதில் என்ன தவறு உள்ளது என ஆபிரிக்காவிற்கான இலங்கை பிரதமரின் சிறப்பு தூதுவர் வேலுப்பிள்ளை கணநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும், எனது விருப்பத்துக்கு அமைய ஜெட்டில் நான் யாருடனும் பயணிக்க முடியும். ராஜபக்ஷ குடும்பத்துடன் நான் மிகவும் நெருக்கமான நட்புறவையும்சகோதரத்துவத்தையும் மேற்கொண்டு வருகின்றேன். எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களுடன் கைகோர்த்தே நின்றேன். இனியும் நிற்பேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு :-

ஒரு நாட்டின் அரச தலைவரின் வெளிநாடுகளுக்கான உத்தியோக பூர்வ விஜயங்களை அவதானிப்பது குடிமக்களின் உரிமையாகும். அத்தகைய வருகைகளால் நாடு எவ்வாறு பயனடைகிறது? என்ன நடக்கின்றது? என்பது குறித்து அவதானிக்கப்படும்.

இந்த நோக்கத்துக்காகவே ஒவ்வொரு வருகையின் முடிவிலும் பயணம் பற்றிய விவரங்களை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க ஒரு செய்திக் குறிப்பு அல்லது அறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஆனால் ஒரு நபரது தனிப்பட்ட வருகைகளின் விவரங்கள் தனிப்பட்டவையாக வைக்கப்படும். எவ்வாறாயினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சமீபத்திய திருப்பதி விஜயம் அவர் தனியார் ஜெட் விமானத்தில் பயணம் செய்ததன் காரணமாக சமூக ஊடகங்களில் பெரும் ஊகங்களுக்கு உட்பட்டது.

இது அரசாங்கத்துக்கு எந்த செலவும் இல்லாமல் தனிப்பட்ட பயணம் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நான் எதுவும் சொல்வதற்கு இல்லை. அதே கால கட்டத்தில் கென்யா மற்றும் உகண்டாவில் இருந்து நான் இலங்கைக்கு தனியார் ஜெட் விமானத்தில் வந்தது உண்மை தான். எனது விருப்பப்படி எந்த பயண முறையையும் தேர்வு செய்து எனது உரிமையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2022இல் வெளியிடப்பெற்றது.